உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நமః

# விஸ்வகர்மன்.

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்—*திருக்குறள்.*

சம்புடம் I.] அக்டோபர் **1913.** [சஞ்சிகை **1.**

## நமது பத்திரிகை.

*எந்தைகுரு தெய்வமுமாய்*
*எவ்வுலகு மீன்றவனாய்*
*எல்லாந் தானாய்*
*அந்தமில்பல் பொருளையெலாம்*
*அளித்தருளிச் சகம்புரக்கும்*
*அண்ணலான*
*சுந்தரவிச் சுவகர்மன்*
*சுருதிமுடி தனிலுறைவான்*
*சுயம்பு வானான்*
*கந்தமலர்த் தாளிணைகள்*
*கருத்திருத்தித் தொழுதேத்திக்*
*கவலை தீர்வாம்.*

விராட் விஸ்வகர்மன் திருவருளை முன்னிட்டு இப்பத்திரிகையைப் பிரசுரிக்க முன்வந்திருக்கிறோம். இது பௌருஷேயர்களுடைய கர்ம, லௌகிக, வைதிக காரியாநுசாரணையான விஷயங்களை பெரிதுங் கொண்டு விளங்கும். அயகாரன், தாருகாரன், தாம்பிரகாரன், சிலாகாரன், சுவர்ணகாரனாகிய மனு, மய, த்வஷ்ட, சிற்பி, விஸ்வக்ஞவென்னும் ஐவகைப்பாகுபாட்டிற்குட் பட்டிருக்கும் பௌருஷேயர்களுடைய தற்காலஸ்திதியை யுயர்த்துவதே இப்பத்திரிகையின் கருத்தாகும். பாரதநாட்டைப் பலதேசத்தாருங் கண்டு வியக்கும்படிப் பல அற்புத கிருத்தியங்களைச்செய்து அதற்கு அணிகலனாய் விளங்கிய இந்த ஜாதியார், இடையில் பலகாரண விசேஷத்தால் கல்வியை யலக்ஷியஞ்செய்து, தமது சிறப்பிற்கும் தமது நாட்டுப் பெருமைக்கும் ஆஸ்பதமாயிருந்த கைத்தொழில்களைக் கைசோர விட்டுவிட்டார்கள். இதனால், இவர்கள் நிலைமை மாறிவிட நேர்ந்தது.

இம்மாறுதலை இவ்வளவோடாகிலும் நிறுத்தி இவர்கள் லௌகிக விஷயமாகவும் வைதிகசம்பந்தமாகவும், கைத்தொழில்களைக்குறித்தும் அறிந்துகொள்ள வேண்டியனவாயிருக்கும் விசேஷங்களை எடுத்து விளக்கி ஹிதோபதேசஞ்செய்யுமுக

த்தால், இவர்களுக்குக் கல்வியில் ஆசை பெருக்கிக் கைத்தொழில்களில் யோகம் விளைத்துக் கஷ்டந்தீர்க்கலா மென்னுங் கருத்துபற்றி இப்பத்திரிகை சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, இதனபிவிருத்தியைக் கொண்டுதான் குலாபிவிருத்தி கணிக்கப்படுமாதலால், குலச்சீர்திருத்தத்திலும் குல மேம்பாட்டிலுங் கருத்து வைத்திருக்குங் கனவான்கள் இதை யாதரித்து குலத்தார்க்குள் பரவச்செய்து குணங்காட்டுவார்களாக.

இப்பத்திரிகையில் வேதசாஸ்திர புராணேதிகாச உண்மைகளுடன், சிற்பசாஸ்திர விஷயமும், மேல் நாட்டுக் கைத்தொழில் நுட்பங்களும் வியாபாரமுறைகளும் பற்றிய வியாசங்களும் வெளிவரும். விஷயதானஞ் செய்வதற்கு ஆங்கிலங் கற்றோரும், சமஸ்கிருத பண்டிதர்களுமாகிய அநேக வித்தியாநிதிகள் அன்போடு இசைந்திருக்கின்றனர். கூடியவரையிலும் குல சம்பந்தமான விஷயங்களே இப்பத்திரிகையி லெழுதப்பட்டுவரும். பெண்களுக்கும் சிறுவர்க்கும் இன்பமளிப்பதற்காகச் சிறுகதைகளு மச்சிடப்படும். ஆதலால், இப்பத்திரிகையைப் பெற்று வாசிப்பவர்களுக்கு அரிய பெரிய விஷயங்கள் வெகு சுலபமாய்த் தெரியவருதல் நிச்சயம். பௌருஷேயகுல ஜனங்களுடைய ஆதரவு அதிகப்படும் அளவிற்குத் தகுந்தபடி பத்திரிகையின் அளவும் விஷயங்களின் அருமையும் அதிகரிக்குமென்பதை நாமுரைக்கவும் வேண்டுமோ?

பத்திரிகைகளின் பலன்கள் பட்டண வாசிகளுக்கு மட்டுமேயல்லாமல் கிராம வாசிகளுக்கும் ஸ்பஷ்டமாய் இக்காலத்தில் தெரிந்திருக்கின்றபடியால் அவற்றைப்பற்றி நாம் இங்கு எழுதுவது அநாவசியம். ஆந்திரதேசத்திலுள்ள நமது சகோதரர்களுக் கென்று "பிரபோதினி" யென்னும் ஆந்திர மாதப்பத்திரிகை குண்டூர் ஜில்லாவிலுள்ள துக்கிராலா என்னுமூரில் நடைபெற்று வருகிறது. இது சுமார் ஒன்பது வருஷகாலமாயுழைத்து வருவதின் பலனை அங்குள்ள பௌருஷேயர்கள் பலவித சீர்திருத்தங்களடைந்து நன்மை பெற்றிருக்கிறார்கள். இப்பத்திரிகையின் போதனைகாரணமாகவே தான் கிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப்பிராமண மகாஜன கான்பரன்ஸ், சென்ற ஆறு வருஷங்களுக் கதிகமாக நிர்விக்கினமாய் நடந்தேறி வருகின்றது. இப்பத்திரிகை பௌருஷேய குலமணியும், ஆந்திரகவி சிரேஷ்டருமாகிய ஸ்ரீவட்டேபாடி—நிரஞ்சன சாஸ்திரியா ரவர்களால் ஷை கான்பரன்ஸ் கமிட்டியார் சார்பில் நடத்தப்படுகிறது.

தமிழ்ப் பாஷையில் இக்குலத்தினருடைய உபயோகத்திற் கென்று ஓர் பத்திரிகை யிருக்கவேண்டுமென்னு மபிப்பிராயம் சென்ற முப்பது வருஷங்களாக சிற்சிலருக்குத் தோன்றிவருகிறதென்றும், அப்படிப் பத்திரிகையை யாரம்பித்து நடத்த முயற்சிகள் செய்யப்பட்டன வென்று மறிவிக்கும் ஆதாரங்க ளிருக்கின்றன. ஆயினும், இக்குலத்தாருடைய புண்ணியக்

குறைவினாலோ அன்றியெதனாலோ இது வரையிலும் தமிழ்ப்பத்திரிகை ஒன்றேனும் ஏற்படாமலேயிருந்தது. குலஜனசங்கியையைக்கொண்டு அளவிடுவோமானால் ஒன்றிற்கு அதிகமான பத்திரிகைகள் நடைபெறவுமிட மிருக்கிறது. இக்குலத்தில் வாசிக்கத்தெரிந்தவர்கள் மிகச்சிலரேயிருக்கின்றார்களென்பதை மறந்தெழுதுகின்றேமில்லை. வாசிக்கத் தெரிந்தவர்களில் ஒரு சிறு பாகத்தார் பத்திரிகையில் பிரியங்காட்டினாற்போதும். இதற்காக, பிராக்ஞர்களாயிருப்போர், பத்திரிகைப் பலன்களை மற்றவர்க் கெடுத்துரைத்து, அவர்கள் இதைவாங்கி வாசிக்கச் செய்ய வேண்டும்.

இப்படிச்செய்வதினால் அவர்களுக்குப் பெரும்புண்ணியஞ் சித்தித்தல் சத்தியம். எப்படியென்றால், அவர்கள் குலோத்தாரணஞ்செய்த குணவான்களாகின்றனர். குலோத்தாரண காரியங்களி லெல்லாம் பத்திரிகா பிரசுரமே பிரதானமானது. ஏனெனில், இக்குலத்தாரிற் பெரும் பாலார் தற்காலத்தில் தாங்கள் தள்ளவேண்டியதிதுவென்றுங் கொள்ளவேண்டியதிதுவென்றும் அறியாதிருக்கின்றார்கள். குல மேம்பாட்டிற்குச் சாதகமானதிதுவென்றும் பாதகமானதிதுவென்று மறிந்தவர்கள் மிகச்சிலரேயா யிருக்கின்றனர். அநேகர் தாங்கள் குலத்தார்க்குச் செய்ய வேண்டிய கடமைகளிவையென்னும் ஞானமேயில்லாமல் நசித்துப் போகின்றனர். இவர்களுக்கு அஷ ஞானத்தை யூட்டினால் குலோன்னதத்திற்கு அநுகூலமுண்டாகு மென்பதொருதலை. இனி, குலோத்தாரணமென்பதென்னவென்றும், அதை ஏன் செய்யவேண்டு மென்றும், எப்படிச் செய்வதென்றும் எத்தனைபேர் இச்சாதியி லறிந்திருக்கிறார்களென்பதை இறைவனே அறிவான்.

மேற்சொல்லியவற்றைப்பற்றிய அறிவு பரவுமட்டும் இக்குல மீடேற மார்க்கமேற்படப்போகிறதில்லையாதலால், பத்திரிகா பிரசுரமே பல நன்மைகளுக் காதாரபூதமாயிருக்கும் அதிசிலாக்யமான காரியமாகும். இக்காரியம் குலஜனங்களுடைய ஆதரவை யெதிர்பார்த்து சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற படியால், பௌருஷேய சந்ததியார் ஒவ்வொருவரும் இதற்குத் துணைசெய்யும்படி விஸ்வகர்மக் கடவுள் முன்னின் றருள்புரிவாராக.

---

## தர்ப்பணோபாக்யானம்.

தர்ப்பணோபாக்யானம் (தர்ப்பணம் = கண்ணாடி) என்பது மூலஸ்தம்பத்தின் ஒரு பாகமாகும். இது, நமது சபாமண்டபத்தில் சென்ற 1913-வருஷம் செப்டம்பர்மீ 14உயன்று, சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் தெருவு பண்டிதர் பிரம்மஸ்ரீ அகஸ்திஸல-வெங்கடநரசிம்ஹம் பந்துலு அவர்களால் உபந்நியசிக்கப்பட்டது. ஆருஷேயராகிய அப் பண்டிதர் பௌருஷேய சகோதர வாத்ஸல்ய மிகுந்தவராய், இவர்களுடைய அபிவிருத்திக் கேதுவான வழிகளில் பிரவர்த்தித்து உழைப்பதில் அதிமோசமுடைய

வராயிருக்கின்றனர். இந்த அபிமானம் இவர்களுடைய பரம்பரையிற் பொருந்தி வருகின்றதென்று கேட்க எவருக்குத் தான் இன்பமுண்டாகாது? இம் மகாபுருஷர் மூலஸ்தம்பாதி பௌருஷேய சம்பந்தமான பல நூல்களையும் நன்றாய் ஆராய்ந்திருக்கின்றனர். இவ்வாராய்ச்சி காரணமாகத்தான் இவருக்கு இக்குலத்தி லிவ்வளவு பற்றுண்டாயிற்றுபோலும். மூலஸ்தம்ப முழுவதையுஞ் சாங்கோபாங்கமாய் இவரால் உபந்நியசிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இன்னும், அந்த அபூர்வகிரந்தத்தை அச்சுவாகன மேற்றிப் பலருக்கும் உபயோகப்படும்படி யமைத்தற்கேற்ற பிரயத்தினங்களுஞ் செய்யப்பட்டுவருகின்றன. மூலஸ்தம்பப் பிரதிகளையுடைய கனவான்கள் அவற்றை சென்னை விஸ்வகர்மகுலோத்தாரண சபைக் காரியதரிசி அவர்களுக்கு அனுப்பினால், பல பிரதிகளையு மொத்திட்டுப் பார்த்து சுத்த பாடமாய் அச்சிடக்கூடும். பிரதிகளை யனுப்புவோருடைய திருநாமங்கள் வந்தனத்துடன் வெளியிடப்படும்.

ஷை உபந்நியாசத்தின் சுருக்கம் வருமாறு :— சர்வலோக காரணனாகியவர் விராட் விஸ்வகர்மாவாகிய மகாபுருஷரே. சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈஸான்யம் என்னும் இவருடைய ஐந்து முகங்களிலிருந்து பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவனென்பவர்கள் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐம்பெருந் தொழில்களைச் செய்யும் பொருட்டு உற்பவிக்கப்பட்டார்கள். மற்றும், மநு, மய, த்வஷ்ட, சிற்பி, விஸ்வக்ஞ என்னும் ஐந்து ரிஷிகள் தோற்றுவிக்கப்பட்டு அயம், தாரு, தாம்பிரம், சிலை, சுவர்ண மிவைசார்ந்த ஐந்தொழில்களைச் செய்ய அமர்த்தப்பட்டார்கள். இவ்வைந்து ரிஷி சந்ததியாரே விஸ்வகர்ம ஜாதியார்கள். இவர்கள் பரப்பிரம்ம சம்பந்திகளாகையால் பிராம்மணர்களே. விராட் புருஷன் வழித்தோன்றியவர்களாகையால் பௌருஷேயர்களெனப்படுவர். இந்த ஜாதியாரெல்லோரும் பிராமணரேயன்றி, இவர்களுக்குள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் பாகுபாடு கிடையாது. அந்தப்பாகுபாடு பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்ட ரிஷிகள் வழித் தோன்றியவர்களுக்குத் தான் உண்டு. அவர்களில் முதற்சாதியாரெனப்படும் பிராமணர்களை மேற்சொல்லிய பிராம்மணர்களினின்றும் வேறுபிரித்துக் காட்டுவதற்காக அவர்கள் ஆருஷேயரெனப்படுவர்.

பௌருஷேயர்கள் தொன்றுதொட்டு மிகச் சிறப்பாகிய நிலையிலிருந்து வந்தார்கள். ஆனால், தற்காலம் இவர்கள் காணப்படும் ஸ்திதியை நோக்கி, அப்படிக் கூறுதல் ஆச்சரியமாகச் சிற்சிலருக்குத் தோன்றலாம். இவர்களுடைய பாக்கிய நிலை மாறித் தௌர்ப்பாக்கிய முண்டானதற்குக் காரணமிருக்கிறது. அதைப் பிரஸ்தாபிக்குஞ் சரித்திரத்திற்கே "தர்ப்பணோபாக்கியானம்" என்று பெயர். இது

மூலஸ்தம்பத்தில் காணப்படுகிறது. மூலஸ்தம்பமோ பௌருஷேய சிறப்புகளைப் பலபடியா யெடுத்துக் கூறும் பரமோத் கிருஷ்ட கிரந்தமாகும். அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் அனந்தம். தப்பனே பாக்கியானத்தினால் பௌருஷேயர்களுக்கு தரித்திர முண்டானவிதம் இதுவென்று ஏற்படுகிறது. அஃதெப்படி யென்றால்:—

கயிலாயத்தின் கண்ணே, ஒருநாள் பரமசிவன் பார்வதி சமேதமாய்த் தேவர்கள் கணங்கள் முதலியோர் புடைசூழ வீற்றிருக்கும்போது, பரமசிவனுக்கும் பார்வதிக்கும் இருவரில் யார் அழகானவர் என்பதைப் பற்றிய விவாதமுண்டாயிற்று. ஒவ்வொருவரும் மற்றவரைப் பழித்துத் தாமே சுந்தரமிகுந்தவரென்று சொல்லிக்கொண்டார்கள். இதனால் ஒரு முடிவு மேற்படாததினால், தேவர்களுடைய அபிப்பிராயத்தை இருவரும் தனித் தனி கேட்கலாயினர். ஒருவர் பக்ஷமுரைத்தால் மற்றவருக்கு மனஸ்தாபம் விளையுமென்ற அச்சத்தினால் அவர்கள் எவர் பக்ஷமும் பேசுவதற்கில்லாமல் தியங்கிக்கிடக்க, சர்வலோக சரண்யரும் தேவாதிதேவனுமாகிய சாக்ஷாத் விராட் விஸ்வகர்மாவானவர் அங்கு ஓர் கண்ணாடியுடன் தோன்றினார். இவரைக்கண்டதும் பரமசிவனும் பார்வதியும் எழுந்து சாஷ்டாங்க தெண்டனிட்டு அர்க்கியபாத்தியாதி உபசாரங்கள் செய்தார்கள். கண்ணாடி கண்ணிற்பட்டதும், அதுகொண்டு தமக்கும் பார்வதிக்கு மேற்பட்ட விவாதத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்று சந்தோஷமிகுதியால் தம்மைமறந்து, அதைக் கொண்டு வந்த பரமேஸ்வரனை நோக்கி "சுவாமி! எங்கள் விவாதத்தைத் தீர்க்கும்படி தாங்கள் கண்ணாடி கொண்டுவந்ததற்காகப் பெரிதும் மகிழ்ந்தேன். இந்த உபகாரஞ்செய்த உமக்கு ஏதேனும் பிரதியுபகாரஞ் செய்யவேண்டு மென்னும எண்ணம் எனக்கு உதித்திருக்கிறது. உமக்கு என்னவேண்டும் கேளுங்கள்" என்று தாம் சொல்வதின்னதென்று அறியாமலே பரமசிவன் பேசினார்.

இவ்வார்த்தைகள் செவிப்பட்டதும், விராட்புருஷர் நகைத்து "ஏ, பரமசிவனே! என்னவார்த்தை சொன்னாய்? உன் யோக்கியதையை அறியாமலே பேசினாயே! எனக்கென்ன வேண்டுமென்று கேட்கச் சொல்லுகிறாயே, சர்வமும் நான் படைத்ததாயிருக்க, நீயும் என் சிருஷ்டிக் குட்பட்டவனா யிருந்துகொண்டு, எனக்கென்ன கொடுக்கப்போகின்றாய்?" என்று கேட்டார். பரமசிவனுக்கு அப்போது சற்று நினைவு தோன்றிற்று. முன்வைத்த காலைப் பின்வைக்கலாகாதென்று உறுதிகொண்டு "சுவாமீ! ஏழைவீட்டில் பிரபு அன்னங் கொள்வதில்லையா? அப்படிப் போல் நான் அளிப்பதைத் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றுரைக்க, "சரி அப்படியே கொடு" என்று இவர் கூறவும் "தங்கள் சிருஷ்டிக்குள் இப்போது அனைத்துமிருக்கின்றன. சகல செல்வங்களுமுள. ஆனால், தரித்திரமென்பது காணப்படவில்லை. அதை உமக்

குத் தருகின்றேன். ஆனால், தாங்கள் பரப்பிரம்மாவாதலால் அது உம்மைத்தாக்காது; உமது நேர்சந்ததியாராகிய பௌருஷேயரைப் பாதிக்கட்டும்'' என்று பரமசிவன் சொல்லி முடித்தனர்.

விராட்புருஷர் சினந்து பரமசிவனை நோக்கி "நீ இவ்விதங் கூறியபடியால் கயிலாய மலையையும், ஆடையாபரணங்களையுமிழந்து மயானத்திலிருந்து கரித்தோல் போர்த்து எலும்புகளும் பாம்புகளுந் தரித்துத் திரியக்கடவாய்'' என்று சபித்தார். உடனே பரமசிவனுடைய சொரூபம் மாறிவிட்டது. அவர் பயந்து நடுநடுங்கி அடியற்ற மரம்போல் கீழே விழ்ந்து "தெய்வமே! நான் அறியாது செய்த குற்றம் பொறுக்கவேண்டும். தாங்களே இப்படிச் சபித்தால் நான் எப்படி தரிப்பேன். கருணாநிதீ! திருவுளமிரங்கவேண்டும்'' என்று பலவிதமாய் வேண்டிக் கொள்ள பரமேஸ்வரர் "நல்லது, நான் கூறிய வசனங்கள் மாறா. ஆனால், இப்போது உனக்கு நேரிட்ட மாறுதல் காரணமாக யாதொரு இழிவும் ஏற்படமாட்டாது. நீயே இறைவனென்று மதிக்கப்பட் டிருப்பாய்'' என்று சாந்தப்படுத்தினர். பார்வதி தானே இவ்வளவுக்குக் காரணமாயிருந்ததை நினைந்து, தான் விஸ்வகர்ம வம்சத்தார்க்கு காளிகாம்பாள் என்ற சொரூபத்துடன் குலதெய்வமாயிருந்து, அவர்களைக் காப்பதாக பிரதிக்கினை செய்துகொண்டாள். அப்போது முதலே, பௌருஷேயர் காளிகாதேவி பூசையில் கவனமதிகம் வைக்கலாயினர்.

## இந்தியக் கைத்தொழிலாளி.

கைத்தொழிற்கார ஜாதியாராய்ப் பாரத நாட்டில் பண்டைக்கால முதல் வாழ்ந்து வருகின்ற நாம், நம்மைப்பற்றிப் பிறர் என்ன சொல்லிக்கொள்ளுகின்றார்களென்பதைக் கவனமாய்க் கேட்டறிந்து கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம். ஏனென்றால், இப்படிக் கேட்பதினாலேதான் நம்முடையநிலைமை யின்னவிதமாயிருக்கிறதென்று நாம் சந்தேக விபரீதமறத் தெரிந்துகொள்ள முடியும். இதையறிந்து கொண்டா லல்லாமல் நம்மில் அவஸ்யமா யிருக்குந் திருத்தங்களைச் செய்துகொள்வது சாத்தியமாகாது. சாத்தியப்படாதபோது, நாம் தொழில்களிலும், வருமானத்திலும், அந்தஸ்திலும் விருத்திபெறுதல் கூடாமையாகிறது. இது கூடாமையா யிற்றென்றால், நாம் நாளுக்கு நாள் இன்னுமின்னுஞ் க்ஷீணமடைதல் திண்ணம். உலகமுழுவதும் விருத்திமுகமே நோக்கியிருக்கவும், சர்வ ஜனங்களும் தமது குறைகளை யாராய்ந்தாராய்ந்து பார்த்து, அவற்றை நீக்கிக்கொள்வதற்காக அல்லும் பகலுமாயுழைத்து, தமது நிலைமையையும் ஜீவனாதாரங்களையும் எவ்விதம் பெருக்கிக் கொள்ளலாமென்ற எண்ணங்கொண்டவர்களாய் ஏற்ற முயற்சிகள் செய்து ஈடேற்ற மடைந்து கொண்டிருக்கவும், நாமட்டும் உள்ளநிலைமையை யுற்றுநோக்காமலும் உயர்வுக்கான முயற்சி தேடாமலும் உறங்கிக் கிடப்போமானால், நம்மை என்னென்று தான் உலகம் மதிக்கும்!

பம்பாய் இராஜதானியைச் சேர்ந்த இஞ்சினீர் மிஸ்டர் ஜான்வாலேஸ் என்பவர் கல்கத்தாவிலுள்ள இஞ்சினீர்கள் சங்கத்தில் வாசித்ததொரு வியாசத்தில் இந்தியக் கைத்தொழிலாளிகளைப் பற்றிச் சொல்லி யிருக்கும் வார்த்தைகள் நமது கவனத்திற்குரியன வாயிருக்கின்றன. ஆங்கிலேயர்கள் வேறு நாட்டினர்களாதலினால், அவர்கள் இந்நாட்டாரில் எவரைப் பற்றி யாகிலும் பாரபட்சமாய்ப் பேசுவதற்கிடமில்லை. அவர்கள் தமது அநுபவத்தில் எதைக் காண்கிறார்களோ அதை வெளிப்படுத்துகிறார்கள். அன்றியும், பலதேசத் தொழிலாளிகளை அவர்கள் பார்த்திருக்கிறார்களாகையினால் ஒருவருக் கொருவர்க் கேற்பட்டிருக்குந் தாரதம்மியத்தைப் பகுத்தறிந்து பார்க்குந் திறமை அவர்களிடங் காணப்படுகிறது.

"இஞ்சினீர்கள் ஒருவரோ டொருவர் சம்பாஷிக்கும்போது, வேறு விசேஷங்களெல்லாம் பேசி முடிக்கப்பட்டாலும் இந்தியக் கைத்தொழிலாளிகளின் குறைபாடுகள்—அதாவது, இவர்களுடைய அஜாக்கிரதை, ஒழுங்கீனம், யோசனைக் குறைவில் பொழுதையும் கஷ்டத்தையும் வீணாக்குதல்—முதலிய வற்றைப்பற்றி எவ்வளவானாலும் பேச இடமிருக்கிறது. சிற்சில பேர்கள் ஓரோவிடத்தில் இவ்விதக்குறைபாடுக ளில்லாதவர்களாய்க் காணப்படுவோர்புகழ்ச்சியே யடைந்துவருகிறார்கள். ஆனால், இவர்கள் புகழப்படுவது மற்றவர்களைப் பலமாய்ப் பழிப்பதன் பொருட்டேயென்று தோன்றுகிறது. இந்தியக் கைத்தொழிலாளிகளையறிந்தா ரெவரேனும் அவர்களுடைய புத்தி கூர்மையை மெச்சாதிருக்க மாட்டார்கள். ஆனால், இந்த புத்தி கூர்மை, தமது பழுதான வேலைகளை மறைப்பதற்கோ அன்றி அவை சரியானவையே யென்று யுக்தி யுக்தியாய்ப்பேசி வாதாடுவதற்கோ முக்கியமாய் உபயோகிக்கப்படுகின்றது. இந்த புத்திகூர்மை சரியானபடி உபயோகிக்கப்படுமாகில் இக் கைத்தொழிலாளிகள் பல குறைகள் நீங்கி யிருப்பார்களென்பதைப் பலரு மொப்புக் கொள்வார்கள்.

"இந்தியத் தொழிலாளிகளின் கல்வியோ கணக்கில் வைக்கப்படக் கூடியதல்ல. இதனால் இவர்கள் பெரும்பாலும் கல்வி சூன்யர்களாய்க் கல்வியில் வெறுப்புற்றிருக்கிறார்கள். இவர்களுடைய கல்வியெனப் படத்தக்கது எதுவென்றால், பணங்கொடுத்தல் வாங்கலிலும் பண்டமாற்றுதலிலும் ஒவ்வொரு தடவையிலும் பேச்சுக் கோர்த்து வாதாடுவதிலும் பழகிக்கொண்ட தெதுவோ அதுவேயென வேண்டும். வேலைக்காரர்கள் ஒருவருக்கொருவர் தொழில் நுட்பங்களை விளக்கமாயெடுத்துக் காட்டுவதில்லை. அவனவன் தானே செய்யும் வேலைகளினா லறிந்துகொள்ள வேண்டியவனா யிருக்கிறான். தானொரு வேலைக்காரனென்று அவன் வெளிப்படும்போது, அவன் ஆயுதங்களையும் அவை யிருக்கும் ஸ்திதியையுங் கண்டுதான் அவனுக்கு வேலையிட விரும்புகிறவன் அவனுடைய திறமையை யளவிட்டுக்கொள்ள

வேண்டும்.''—என்று ஷை இஞ்சினீர் துரை எழுதுகிறார்.

இப்படி அநேகர் அநேகவிதமா யெழுதுகிறார்கள், உபந்நியசிக்கிறார்கள், போதிக்கிறார்கள். இவர்களுடைய வாக்கியங்கள் பல பத்திரிகைகளிலும் வெளியாகின்றன. இங்கிலீஷ் தெரிந்தவர்கள் மாத்திரமேயல்லாமல், தமிழ் தெலுங்கு கன்னடம் முதலிய சுதேசபாஷைகளை யறிந்தவர்களும் இவற்றை வாசிக்கின்றார்கள். தமது நாட்டுக் கைத்தொழிலாளிகளைப் பற்றி நமது சகோதரர்கள் அநுபவத்தால் அடைந்திருக்கும் ஞானத்திற்கு ஷை விதத்தால் கிடைக்கும் ஞானம் துணை நிற்கிறது. நிற்கவே, நமது நாட்டினர் கைத்தொழிலாளிகள் மேல் நாளுக்கு நாள் வெறுப்புக் கொள்ளலாயினர். பரம்பரையாய்க் கைத்தொழில்களிற் பிரவேசமா யிருக்கும் நம்மினத்தின் மீது மற்ற இனத்தார்க்கேற்பட்ட த்வேஷமூலங்களில் இது முக்கியமான தென்போம். இத்த்வேஷம் பல காரணங்களால் பல மடைந்தது; இன்னுமடைந்து வருகிறதென்றுஞ் சொல்லலாம்.

இவ்வித பொதுஜன அபிப்பிராயத்தை நாம் கணித்து நடப்பது நமது இன்றியமையாக் கடமையாயிருக்கிறது. பொதுஜனாபிப் பிராயமானது எவ்விஷயத்தைச்சார்ந்த தாயினும் கவனத்திற்குரிய தென்னுங் கொள்கையுடையோராய் நம்மவர் நடக்கப் பழகுமட்டும் நமக்கு உய்வில்லையென்றே உறுதியாய்ச் சொல்லலாம். நம்முடைய புத்திகூர்மை நானு தேசத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற தொன்றே நமக்குத் தைரியங் கொடுத்து ஊக்குவதற்குப் போதுமான ஆதாரமாயிருக்கிறது. மிஸ்டர் வாலேஸ் சொன்னபடி, அந்த புத்தியை நாம் வீண்வாதங்களில் விரயப்படுத்தி விடாமல், விசேஷ திறமையடைந்து, ஆங்கிலேயருடையவும் மற்றவருடையவும் மதிப்பைப் பெற்று எத்தேசத்தாரும் இவர்களுக்கு நிகரில்லை யென்று சொல்லும்படி உள்ளபடியே உபயோகப் படுத்தி வருதல் வேண்டும். வாதாட்டங்களால் வெற்றிபெறலா மென்னுங்கொள்கை நம்மவர்களுக்குள் அதிகமாய்ப் பரவி வேரூன்றி வருதல் விசனத்திற் கிடமாயிருக்கிறது. இவ்வாதாட்டமே நமதுஜாதியாருடைய நன்மையைக் குலைத்து வருகிறதென்னு முண்மையை நம்மவர்கள் நன்குணரவேண்டும். வாதாட்டங்களினால் எக்குறைவையும் மறைத்து விடலாமென்று நம்மவர்கள் நம்பி யிருக்கிறார்கள். இது மிகப் பிழையான கருத்து. இந்நம்பிக்கை நாசமடையும் நாளே நமக்கு நற்காலம் பிறக்கும் நன்னாள். அந்நாள் வருமளவும் அல்லலே நமக்குக் கதியென்று சொன்னார் பலரும்.

புத்திப் பிரயோகத்தால் புதுமைகள் காட்டிக்கொண்டு, ஒழுங்கீனங்களை யுதறியொழித்து, காலந்தவறாது கண்ணியமாகக் கைப்பட்ட வேலைகளை மெய்ப்படச் செய்து தந்து, கல்வியும் பொருந்திக் கௌரவமாய் வாழ்ந்து வருவோமானால் நம்மை யார்தாங் கொண்டாட மாட்டார்கள்? அவ்விதங் கொண்டாடப்படுதற்கு

ரியவிதமாய் நாம் நடந்துகொள்ள வேண்டுமல்லவா? அதில் நாட்டம் வையாமலே அந்நியர்மேல் சலிப்புற்றிருப்பதினால் என்னடையப் போகிறோம்? பின்னமேயன்றிப் பிறிதடையமாட்டோம். இதை நமது குலத்தலைவர்களாயுள்ள நாட்டாண்மைக்காரர்களும், காரியஸ்தர்களும், மற்றவர்களும் கவனித்துத் தங்கள் தங்களாற் கூடியவரையிலும் மேற்காட்டிய உண்மைகளை சுஜாதியார்கள் ஒவ்வொருவருக்கும் போதித்து, அவர்கள் இவற்றை மனத்திற்பதித்து மாண்புறவாழ்ந்து, குலத்திற்கும் தமக்கும் கோதிலாப்புகழ் கூடிநிலைக்கும்படி கண்ணுங் கருத்துமாயிருந்துழைப்பார்களாக. கௌரவமாய் ஜீவனஞ்செய்யுங் கைத்தொழிலாளிகள் எத்தனையோபேர் இன்றும்நம்முள் குலமணிகளாய் விளங்கிக் கொண்டிருக்கின்றனர். என்றாலும், பொதுப்பட பழிப்பு என்பது தனியா யிருந்துவருகிறது. அதை வேரறுப்பதில் ஒவ்வொருவருக்கும் கவனமிருக்கவேண்டும்.

---

## சிற்பசாஸ்திர விஷயம்.

சமஸ்த பிராணிகளிலும், மனுஷ்ய ஜன்மம் சிலாக்கியம். அதிலும் அங்கபங்கமில்லாமல் அரோக சரீரமா யிருப்பது சிரேஷ்டம். அதிலும் மோக்ஷத்தை பிராபிக்கவேண்டியதே ஜன்மம் எடுத்ததின் முக்கிய பிரயோஜனம். அதற்கு மார்க்கமிருவகைப்படும். அதாவது நிவிர்த்தியென்கிற ஞானத்தினாலும், விக்ஞானமென்கிற பிரவிர்த்தியோடு கூடின கர்மங்களினாலும் மோக்ஷத்தை யடையவேண்டுமே தவிர வேறே மார்க்கமில்லை. இப்பிரகாரமே சுருதி கர்மயோகமென்றும், ஞானயோகமென்றும், இரண்டாக பிரவர்த்தித்திருக்கிறது.

ஞானமானது விக்ஞானமாகிற கர்மத்தின் அந்தர்ப்பூதமா யிருக்கின்றமையால் அந்த கர்மமே ஸகுணரூபமான பிரபஞ்சசொரூபமா யிருக்கின்றது. கர்மபரித்தியாகமும், கர்மானுஷ்டானமுமான இருவகை மார்க்கங்கள் மோக்ஷசாதனமாயினும், கர்மத்தினாலடையப்படும் மோக்ஷமே விசேஷமென்றும், கர்மானுஷ்டானமே சிறந்ததென்றும், பூர்வத்தில் மோக்ஷாபேக்ஷையுடைய சனகாதி முமுக்ஷுக்களும், கர்மானுஷ்டானங்களைச் செய்திருக்கிறார்களென்றும், கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வசனம்.

பகவத்கீதை அத்தியாயம்-ச.

சன்னியாஸ: கர்மயோகஞ்ச
நிஸ்ரெயஸகராவுபௌ
தயொஸ்து கர்மஸன்யாஸாத்
கர்மயோகோவிஸிஷ்யதே || (௨)

கீதை-அத்தியாயம்-ச.

ஏவம்க்ஞாத்வாக்ருதம்
கர்மபூர்வைரபிமுமுக்ஷுபி:
குருகர்மைவதஸ்மாத்தம்பூர்வை:
பூர்வதரம்க்ருதம் || (௧௫)

சாஸ்திரவிதியை யனுசரியாமல் எவன் தன்னிஷ்டப்படி நடக்கிறானோ அவன் இந்த லோகத்தில் சுகமும், பிற்பாடு உத்தமமான மோக்ஷமும், அடைகிறதில்லை. ஆனபடியால் சாஸ்திரங்களைப் பிரமாண

மென்று நம்பி சாஸ்திர சம்மதமான கர்மங்களைத் தெரிந்து அதின்படியாகவே கர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

கீதை அத்தியாயம்-௰௬.

யஶ்ஶாஸ்திரவிதிமுத்ஸ்ருஜ்ய
வர்த்ததேகாமகாரத:
நஸஸித்திமவாப்னோதி
நசுகம்நபராங்கதிம் || (௰௩)
தஸ்மாத்சாஸ்திரம்ப்ரமாணந்தே
கார்யாகார்யவ்யவஸ்திதௌ
க்ஞாத்வாசாஸ்திரவிதானோக்தம்
கர்மகர்த்துமிஹார்ஹஸி || (௰௪)

எந்த தேவனால் சமஸ்த ஜகத்தும் பிறந்து வியாபிக்கப்பட்டுள்ளதோ அந்த ஈசுவரனை மனுஷ்யர்கள் தங்கள் தங்கள் ஸ்வகீய கர்மானுஷ்டானத்தால் பூஜித்து சித்திபடைகிறார்கள்.

கீதை அத்தியாயம்-௰௮.

யத:ப்ரவிர்த்திர்பூதானாம்
யேனஸர்வமிதம்தத:
ஸ்வகர்மணாதமப்பியர்ச்சிய
சித்திம்விந்ததிமானவ: || (௪௬)

பிரவிர்த்தியன்னியில் மோக்ஷவிஷயமான புத்திக்கு ஞானமென்றும், பிரவிர்த்தியாகிற கர்மானுஷ்டானங்களோடு கூடின மோக்ஷவிஷயமான புத்திக்கு விக்ஞானமென்றும் இந்த விக்ஞானமே சிற்பசாஸ்திரமென்றும் சொல்லப்படுகிறது.

அமரகோசம் பிரதமகாண்டம்.

மோக்ஷதீக்ஞானமன்யத்ர
விக்ஞானம்சில்பசாஸ்திரயோ: ||

விக்ஞானமாகிற சிற்பசாஸ்திரம் பிர்மகர்மஸ்வபாவங்களி லொன்றாகவு மிருக்கிறது.

கீதை அத்தியாயம்-௰௮.

ஶமோதமஸ்தபஶ்ஶௌசம்
க்ஷாந்திரார்ஜவமேவச
க்ஞானம்விக்ஞானமாஸ்திக்யம்
பிர்மகர்மஸ்வபாவஜம் || (௪௨)

ஞானேந்திரிய நிக்கிரகம், கர்மேந்திரிய நிக்கிரகம், தபசு, ஆசாரம், க்ஷமை, நிஷ்கபடம், ஞானம், விக்ஞானம், நம்பிக்கை என்பவைகளே பிராம்மண கர்மஸ்வபாவம். இவற்றுள் ஞானமென்பது மோக்ஷத்தை யடைகிறது. விக்ஞானமென்பது பிரவிர்த்தியாகிற தேவாராதனை முதலிய கர்மானுஷ்டான வழியாய் மோக்ஷத்தை யடைகிறது.

விக்ஞானமாகிற சகுணரூப மன்னியில் ஞானத்திற்கு மார்க்கமில்லை. இந்த விக்ஞானமே சிற்பசாஸ்திரம். இந்த சிற்பசாஸ்திரமே பிராம்மண கர்மங்களுக்கு அடிஸ்தானமாயும், மோக்ஷத்திற்கு ஹேதுபூதமாயு மிருக்கிறது.

சிற்பசாஸ்திரம் பிரபஞ்சத்தை யாளுகிறதற்கு ஓர் சக்கிரவர்த்தி போன்றதும், சகுணரூபமானதும், சாத்வீக குணத்தை யுடையதும், சரியை - கிரியை - யோகம் - ஞானமென்றவைகளைக் கொடுக்கும் வஸ்துவாயும், பிரபஞ்சாபிவிர்த்தியான பெருக்கத்திற்கு மாதாவாயும், சிருஷ்டியில் கர்த்தாவாயும், பிரவிர்த்திக்கு சாதனமாயு மிருக்கிறது.

மேலும், சிற்பமானது இகத்திற்கும், பரத்திற்கும் ஆதாரமாயும், சிருஷ்டி,

ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகமென்ற பஞ்சகிருத்தியங்களுக்கு பந்தாவாயும், ஆதிபூதமாயும், வேதசாஸ்திரஸ்வரூபமாயும், லோகோபகார மானதாயும், சைவம்-வைஷ்ணவம் - சாக்தேயம்-சௌரம்-காணபத்தியம் - கௌமார முதலான வைதீகமதங்களையும், பௌத்தம்-ஜைனம்-பைரவம் - காளாமுகம்-லோகாயிதம்-சூனியவாத முதலான புறச்சமயங்களையும் விதித்து, யாவர்களுக்கும் தர்மம்-அர்த்தம்-காமம் - பக்தி-ஞானம் - முதலியவைகளைக் கொடுத்து சாயுஜ்யமடையச் செய்வதற்கு சாதனமாயும், லோகத்தில் மனுஷ்யாள் முதலான ஜீவராசிகள் உஜ்ஜீவிக்கும்படியாகவும் அதப்படித்தும்படியாகவுமிருக்கிற கருவியாயும், சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடிய தாதாவாயும், விதிவிலக்கைக் காண்பிக்கிற விதாயகமாயும், சிருஷ்டி கிருத்திய முடையதாயும், ஞானத்தைக் கொடுக்கும் பாத்திரமாயும், வேதாங்க - உபாங்க-கலைஞானங்களுக்கு வித்தாயும், ஸ்தாபத்திய வேதமாயும், அதர்வோபவேதமாயும், அர்த்தசாஸ்திரமென்று சொல்லப்பட்டதாயும், விஸ்வகர்ம சாஸ்திரமாயும், கணிதங்களுக்கு மாதாவாயும், ஸகுண பிர்ம்மத்தினுடைய வதனத்திலிருந் துற்பவித்ததாயும், அளவில்லாத கிரந்த சங்கைகளோடு கூடினதாயு மிருக்கிறது.

சிருஷ்டி பிரவர்த்தகத்திற்காக பிர்மமானது ஸகுணரூபமாக சூரிய-இந்திர-பிர்ம்ம-விஷ்ணு-ருத்ர-மஹேச சதாசிவமென்ற மூர்த்திபேதங்களாகி இந்த மூர்த்திகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொருகாலங்களில் சிருஷ்டிசெய்த ஹேதுவினால் இவர்களுக்கு சிற்பியென்றும், ஸ்தபதியென்றும், துவஷ்டாவென்றும், தக்ஷகனென்றும், விஸ்வகர்மாவென்றும், நாமங்களேற்பட்டிருக்கின்றன. தத்வம்சந்ததவர்களாகவும், லோகாபிவிருத்தி யடையும்பொருட்டு சமஸ்த சிருஷ்டி கர்மங்களுடையவர்களாகவுமிருக்கிற விஸ்வகர்மர்களை சிற்பியென்றும், ஸ்தபதியென்றும், வர்த்தகியென்றும், துவஷ்டாவென்றும், தக்ஷாவென்றும், மனுவென்றும், மயனென்றும், விஸ்வகர்மாவென்றும், பலநாமங்களாக சப்த கல்பத்ருமம், சப்தஸ்தோம மஹாநிதி முதலான அனேக நிகண்டுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

சிற்பசாஸ்திர பிரவர்த்தகத்தால் வர்ணாசிரமபேதங்களும், நித்திய நைமித்திக கர்மங்களும், யாகாதி கர்மங்கள் முதலான (௪௰) சம்ஸ்காரங்களும், இந்த நாற்பது சப்ஸ்காரங்களினால் சரீரசுத்தியு முண்டாகின்றது. இதனால் பக்தி யோகத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணமாகின்றது.

இவ்வளவு மகத்துவம் பொருந்திய சிற்பசாஸ்திரமானது பிரஜாபதியின் உத்தரமுகத்தி லிருந்தும், உண்டாயிருக்கின்றது.

பாகவதம் அத்தியாயம்-௰௨.

ஆயுர்வேதந்தநுர்வேதம்
காந்தர்வம்வேதமாத்மபூ:
ஸ்தாபத்யஞ்சாசிருஜத்வேதம்
க்ரமாத்பூர்வாதிபிர்முகை: || (௩௫)

பிர்மாவின் கிழக்குவதனத்தில் ஆயுர்வேதமும், தெற்குவதனத்தில் தநுர்வேதமும், மேற்குவதனத்தில் காந்தர்வவேதமும், உத்தரவதனத்தில் ஸ்தாபத்தியமென்றும் ஸ்தபதி வேதமென்றும் சொல்லப்பட்ட சிற்பசாஸ்திரமானது உண்டானதென்றும், வியாக்யானத்தில் ஸ்தபதியென்பதற்கு விஸ்வகர்மாவென்றும், ஸ்தாபத்தியமென்றதனால் விஸ்வகர்ம வம்சத்திற்கிந்தசாஸ்திரம் அதிகாரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த சாஸ்திரத்திற்கு அதிபதிகள் ஸ்தபதிகளென்ற விஸ்வகர்மர்களென்றும் அவர்களே பிரபஞ்ச சிருஷ்டிக்கு கர்த்தர்களென்றும், யக்ஞ கர்த்தர்களென்றும், சுருதி, ஸ்மிருதி, இராமாயண, பாரத, பாகவத, சிற்ப, விஷ்ணுபுராண முதலிய சமஸ்த கிரந்தங்களிலும் சொல்லப்படுகிறது.

விஸ்வகர்ம ப்ரஜாபதியின் முகத்திலுற்பவித்ததும், உத்தமமானதுமான சிற்ப சாஸ்திரம் உபசிற்பங்களோடு சேர்ந்து அபரிமிதமாக விருந்தாலும் ஒருவாறு சங்கியை (௩௰௨) என்பதாக கற்பித்து அதின் சுலோக சங்கியைகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

சிற்பம் மயமதம் அத்தியாயம்-௰௫.

பரார்த்தம்விஸ்வகர்மீயம்
விஸ்வேஸம்அற்புதம்பவேத் || (௧)
விஸ்வபோதம்விஸ்வதர்மம்
கல்பாக்யம்விருத்தமேவச
மயம்பாதுவிசாலாக்ஷம்
சிருஷ்டம்ப்ராயுதம்பவேத் || (௨)
வாஸ்துபோதஞ்சமஹாதந்திரம்
ஆதிஸாரந்த்ரிசங்ககம்
பாராசர்யம்த்ரிகோடிஞ்ச
மானஸாரந்ததாபவேத் || (௩)
ஸௌரம்இந்திரம்சைத்திகஞ்ச
வஜ்ரம்கோடிஸமம்விதம்
மானபோதஞ்சகர்வம்ஸ்யாத்
அநுமான்களமாயுதம் || (௪)
வாஸ்துவித்யாபதிச்சைவ
தாவட்டந்துநிகர்வகம்
பஹுசுருதம்சாத்விகஞ்ச
சுருடிகந்துபத்மகம் || (௫)
விஸ்தாரம்நாமசங்கித்யம்
காபில்யஞ்சத்ரிகோடிகம்
ஏதேதேவருஷய:ப்ரோக்தம்
தத்வாத்ரிம்சதிசங்க்யயா || (௬)
த்வாத்ரிம்சருஷிதந்தரக்ஞும்
சில்பசாஸ்திரமிதம்ஜகத்
தத்தத்கொத்ரவசாஜ்ஞாதொ
சில்பிஸர்வத்ரயோக்யகம் || (௭)
வாஸ்துக்ருத்யம்விநாசில்பி
தத்தத்கர்த்தாகுலக்ஷயம்
தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந
சில்பிநாஸர்வகர்மக்ருத் || (௮)
ஏவம்முநிவரை:ப்ரோக்தம்
கிரககிராமாதிவஸ்துநாம் ||

விஸ்வகர்மீயம்-அத்தியாயம்-௰௨.

தேவாநாம்மாநுஷம்ப்ரோக்தம்
ஸர்வப்ராண்யாபரிக்ரஹெத்
ஸ்தாபிதம்விஸ்வகர்மஞ்ச
நிர்மிதாயாத்யநிச்சிதௌ ||

ஸர்வசாஸ்திரேணஸாரஞ்சு
கல்பயேத்விஸ்வகர்மண: ||

விஸ்வகர்மீயம் கிரந்த சுலோக சங்கியை * பரார்த்தமென்றும், விஸ்வெஸம்-அற்புத சங்கியையென்றும், காசியபம்-விஸ்வஸாரம் இவ்விரண்டும் தனித்தனி சலதி சங்கியையென்றும், விஸ்வபோதம்-விஸ்வதர்மம் - கல்ப்பாக்கியம் - விருத்தம்-மயம்-பானு - விசாலாக்ஷம் - சிருஷ்டம்-இவைகளொவ்வொன்றும் பிரயுத சங்கியையென்றும், வாஸ்துபோதம் - மஹாதந்திரம்-ஆதிசாரம்- இவைகளொவ்வொன்றும் மூன்றுசங்க சங்கியையென்றும், பாராசரியம்-மானசாரம் இவைகளொவ்வொன்றும் மூன்றுகோடி சங்கியையென்றும், சௌரம்-இந்திரம் - சைத்திகம்-வஜ்ரம் - இவைகள் தனித்தனியே கோடிசங்கியையென்றும், மானபோதம் - கர்வசங்கியையென்றும், ஹநுமான்-நளம் இவைகளொவ்வொன்றும் அயுத சங்கியையென்றும், வாஸ்து வித்யாபதி-தாவட்டம் - ஒவ்வொன்றும் நிகர்வ சங்கியையென்றும், பஹுசுருதம்-சாத்வீகம் - அரிடிகம் இவைகள் ஒவ்வொன்றும் பத்மசங்கியை யென்றும், விஸ்தாரம் - நாமசங்கீதை - காபில்லியம்-இவைகளொவ்வொன்றும் மூன்றுகோடி சங்கியையென்றும், இவைகள் தேவர்களினாலும், மஹாரிஷிகளினாலும் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், முப்பத்திரண்டு சிற்பகிரந்தமென்றும், இந்த (௩௰௨) சிற்பசாஸ்திரங்களும் ஜகத்துக்கு ஹிதத்தைக்கொடுக்கின்றதற்கும் பிராணிகளைப் பரிபாலிக்கின்றதற்குமாக சகல சாஸ்திரங்களுடைய ஸாரமாக நிச்சயப்படுத்தி ஸ்தாபிக்கும்படியாக விஸ்வகர்மாவினால் கற்பிக்கப்பட்டதாயு மிருக்கின்றன. இந்த விஸ்வகர்மாவின் வம்சத்தவராயும், யோக்கியராகவுமிருக்கிற சிற்பியைக்கொண்டு கிரககிராமாதிகளை வாஸ்து சாஸ்திரோக்தமாக செய்யவேண்டும். வாஸ்து சாஸ்திரத்திற்கு அதிகாரிக ளல்லாதவர்களைக்கொண்டு செய்தால் அந்தகர்த்தா முதலானவர்களின் குலங்கள் நாசத்தையடையுமென்றும் மஹாரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் வரும்.

ஜோஸ்யர். முத்து ஆசாரியார்.

* ஏக-1. தச-10. சத-100. சகஸ்ர-1000. அயுத-10000. நியுத-100000. பிரயுத-1000000. கோடி-10000000. அற்புத-100000000. பிருந்த-1000000000. கர்வ-10000000000. நிகர்வ-100000000000. மகாபத்ம-1000000000000. சங்க-10000000000000. சலதி-100000000000000. அந்திய-1000000000000000. மத்ய-10000000000000000. பரார்த்த-100000000000000000.

---

## இருக்குவேதத்திற் புகழ்ந்துபேசிய ஈகையாளர்கள்.

"சுவநயன்"--இவனுடைய ஈகையைப் பற்றி-ருக்வேதம் முதற்காண்டம் 18-வது அத்தியாயம் 6-வது சூக்தத்தில் கக்ஷீவதனன் என்னும் ஓர் இருடியினால் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

"அசங்கன்"-பிளயோகன் என்பவனுக்கும் அவனுக்குப் பின் அரசாண்டவனுக்கும் புத்திரன். அவன் பெண்ணாக உருமாற்றஞ் செய்யப்பட்டு தன்னுடைய தோ

த்திரங்களால் மறுபடியும் ஆண்வடிவை யடைந்து தனக்கு மகா உதாரத்துவத் தோடு வெகுமதிகள் தந்ததைப் பற்றி— ருக்வேதம் 8-வது காண்டத்தின் ஆரம் பத்திலுள்ள கீதத்தில் மேதைபதிதியினால் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

"விபிந்து இராஜன், கூரயாணன் என் பவனுடைய புத்திரனாகிய பகஸ்தமனன் என்னும் இராஜன், குருங்கன் என் னும் இராஜன், சேதிபுத்திரனாகிய கஷு என்னும் இராஜன் பாஷுபுத்திரனாகிய திருந்திரன் என்னும் இராஜன்" ஆகிய இவ் விராஜாக்களுடைய தியாகத்தைப்ப ற்றி ஷை கீதத்துக்கடுத்த சூக்தங்களில் ஈகையை யடைந்த இருடிகளாற் புகழ் ந்து பேசியிருக்கிறது.

"திரசதாசயன்"—மாந்தாத்திரி பென் பவன் பௌத்திரன். இவனுடைய தயாள த்தைக்குறித்து ருக்வேதம் 8-வது காண் டம் 3-வது அத்தியாயம் 7-வது சூக்தத் தில் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

"சித்திரன்"—இவனுடைய நன்கொ டையைக் குறித்து ஷை காண்டம் 4-வது அத்தியாயம் 1-வது ஸ்தோத்திரத்தில் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

"வரு"—சூஷாமனன் புத்திரன். இவ னைப்பற்றி ஷை அத்தியாயம் நான்காவது சூக்தத்திற் புகழ்ந்துபேசி யிருக்கிறது.

***

## இருக்குவேத கீதங்களின் கிரந்தகர்த்தர்கள்.

2-வது காண்டங்களி லிருக்கிற கீதங்களு க்கு "கிரதசமதன்"
3-வது ... .... "விஸ்வாமித்திரர்"
4-வது .... .... "வாமதேவர்"
5-வது .... .... "புதனும், அத்திரியினு டைய சந்திதியார்களும்"
6-வது .... ... "பரத்துவாசர்"
7-வது ... .... "வசிஷ்டர்"

மற்ற காண்டங்களிலுள்ள கீதங்களைச் செய்தவர்கள் அகஸ்தியர், மரீசி புத்திரனா கிய கசியபர், அங்கீரசர், பிருகு புத்திர னாப ஜமதக்கினி, வியாசருடைய தந் தையாகிய பாரசர், கௌதமர், அவரு டைய புத்திரராகிய நோதசர், பிரகஸ் பதி, நாரதர், மற்றுமுண்டான பெரு மைபெற்ற ரிஷிகள், கண்ணுவர், அவ ருடைய சந்ததிகளாகிய மேதாதிதி முத லிய பேர்கள், பிரகஸ்பதி சந்ததிகளில் மதசந்தன் முதலாகிய பேர்கள், அஜீகர்த் தன் புத்திரனான சுனச்சேபன், அங்கீ ரசன் சந்ததிகளாகிய குத்சன், இரண்ணி யஸ்தூயன், சவ்வியன், இவர்களுமல்லா மல் மேல்விவரித்த பெரியவர்களுடைய சந்ததியில் அனேக இதர இருடிகளும், அனேக இராஜவம்சத்தினரும் வேதகிர ந்தகர்த்தர்களாயிருக்கிறார்க ளென்று, வே தத்தோடு வழங்கி வரப்பட்டுக் கொண்டி ருக்கின்ற அனுக்கிரமணிகையில், அல் லது பொழிப்புவிவர அட்டவணையிற் காப் பாற்றப் பட்டுவருகிறதாக வெளிவந்திருக் கிற வேதவசனங்கள் முறையிடுகின்றன.

***

## விஸ்வ சமயாசாரிய சுவாமிகள்.

1-சிங்கேரி. ஸ்ரீமன்-ஆதிதுவஷ்ட சங் கராச்சாரிய சுவாமிகள்.

2-சாலிவாடிபுராதீனம். ஸ்ரீமத்-பரசமய கோளரிநாத சுவாமிகள்.

3-திந்திவீபுரம். ஸ்ரீமன்-மௌனகுரு ருத்திர மூர்த்தியோகீந்திர சுவாமிகள்.

உட்பிரிவு. பெங்களூர்தண்டு ஸ்ரீமன் ரிஷபேந்திர மௌனகுருயோகீஸ்வர சுவாமிகள்.

விலிஞ்சிபுரம். ஸ்ரீமன்-மௌனகுரு யோகீந்திர சுவாமிகள்.

4-போதனூர். ஸ்ரீமன்-வீரப்ரம்மம் காரு என்கின்ற வீரப்ரம்மேந்திரகுரு சுவாமிகள்.

உட்பிரிவு-நந்திமலை ஸ்ரீமத்-சிவசங்கர யோகீஸ்வர சுவாமிகள்.

5-வீப்பூர்-ஸ்ரீமன் வேங்கடாச்சாரிய குருசுவாமிகள்.

உட்பிரிவு-வேதகிரி-சாஸ்திரகிரி, புராணகிரி, என மூன்று மடாதிபதிகளுண்டெனப்பிரஸ்தாபம்.

அந்தியூர். ஸ்ரீமன் வேங்கடாச்சாரிய குரு சுவாமிகள். மேற்கண்ட மடாதிபதிகளின் ஒருவர் பெண்மகள்வாய்சில் உற்பத்தியான தௌஹித்திர ரெனக்கேள்வி.

6-சினந்தல். ஸ்ரீமத் சிவலிங்ககுரு சுவாமிகள்.

7-சிதம்பரம். ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுரு சுவாமிகள்.

உட்பிரிவு. ஷை சுவாமிகளின் சிரேஷ்டதமயனார் அவர்களும் மடாதிபதியாக தேசசஞ்சாரம் செய்துகொண்டு வருகிறார்.

8-ஒசூர். ஸ்ரீமன் சுக்ஞானமூர்த்தி சுவாமிகள்.

9-சன்னபுரம். ஸ்ரீமன் ஞானமூர்த்தி சுவாமிகள்.

10-நெல்லூர். ஸ்ரீமன் எஜுர்வேத இராமாச்சாரிய சுவாமிகள்.

**V.** மௌனகுரு—ருத்திரமூர்த்தி
ஆச்சாரியார்,
திருச்சிவிஸ்வப்ரம்ஹமஹாஜன
சென்ட்ரல்சபை
வைஸ்பிரசிடென்ட் அன்ட்
=. முனிசிபல் கௌன்சிலர்
**பழனிஸ்தலம்.**

---

## நமது நிலைமை.

கல்விமறந்தோம் கைத்தொழிலிலோம்
கதிகெட்டோம்
செல்வமிழந்தோம் சீருமழிந்தோம்
சிறியோமாய்ப்
பல்லவரோடும் பாகமடைந்தே
பாழ்போனோம்
அல்லலொழிக்கு மருநெறிசேர்தற்
கணையோமோ. (1)
குற்றமலிந்தோம் குணமுளவிட்டோம்
கொண்டாடும்
பெற்றிதவிர்த்தோம் பேசறமார்க்கம்
பேணாதே
இற்றையநாளில் இழிவுறலானோம்
என்னே நாம்
மற்றினியேனும் மையலறுக்க
பாட்டோமோ. (2)
விப்பிரவாதம் வீணிற்கொண்டே
மெலிவுற்றோம்
திப்பியர்சங்கந் தேடிக்கூடித்
திரிந்தெய்த்தோம்

ஒப்புரவில்லோம் உண்மைவெறுப்போம்
உயர்வெப்தல்
எப்படியென்னும் ஏக்கமுண்டோகொல்
இசைப்பீரே. (3)
பேச்சுக்கற்றோம் மற்றவர்மாற்றம்
பிரித்தாயோம்
ஏச்சுக்காதர வாவனசற்றும்
எறியோமால்
சீச்சீயென்றுல கோதுவதெல்லாஞ்
சிறப்பாக
மாச்சரியத்தா லாயவையென்றே
மகிழ்வோமே. (4)
யாரையிகழ்வோம் யாதினிசெய்வோம்
யாராலே
பாரினிலின்பப் பண்புறு மென்னப்
பலகாலும்
தேரிடில்நாமே தீமைவிளைத்த
திறமெல்லாம்
நேர்படலாகும் நீசமொழிக்க
நினைவோமே. (5)

## குலாபிவிருத்திக்கு நாம் செய்ய வேண்டியதென்ன?

நம்மவர்களில் பெரும்பான்மையோர் 'நான் குலத்திற்கு பாடுபடுகிறேன், நான் குலத்திற்கு பாடுபடுகிறேன்' என்று சொல்லுகிறார்களே தவிர, குலாபிவிருத்திக்காக தற்போது அனுஷ்டிக்கவேண்டிய சீர்திருத்தங்களை நம்மவருக்கு உபதேசிக்கவுமில்லை, தாமும் அனுஷ்டித்துக் காண்பிக்கவுமில்லை. தற்சமயம் குலத்திற்கு உழைப்பவர் என்போர் வைதிகவேடத்தாலும், சாதுர்யப்பேச்சினாலும், அங்குமிங்கும தெரிந்த சிற்சில ஸ்லோகங்களாலும் நம்மவர்களை ஏமாற்றி இதே தொழிலாக ஜீவனம் செய்துவருகிறார்கள். ஆனால், அவ்விதம் ஜீவனத்திற்கு உழைப்பவர் உண்மைபேசி ஏதாவது உபகாரார்த்தமாய் பெற்றுக்கொள்வது பிசகாகமாட்டாது. அவ்வாறில்லாமல் சிலர் தாம் பணத்தில் வெறுப்புடையராகவும் குலத்தை சீர்திருத்துவதே தமது விரதமாகவும் பேசி மோசம் செய்து வருகிறார்கள். அப்படி செய்து வருவதினால் உண்மையாய் உழைப்பவர்களிடத்தும் சந்தேகம் ஏற்படுகிறது.

ஆனால், அனேகரில் ஒருவர்தான் யதார்த்தமாய் பொது விஷயங்களிலும் குல அபிவிருத்தியிலும் பாடுபடுவார்கள். அவ்விதம் பாடுபடுகிறவர்களிடத்தும் நம்மவர்கள் குற்றம் சாட்டக் கண்ணும் கருத்துமாய் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ சிலர் தன்னயம் பாராட்டாமல் பரோபகாரார்த்தமாய் புத்தியைசெலுத்தி குலோத்தாரணம் செய்ய சில விதிநிஷேதங்களை உபதேசிக்க முயன்றாலும் அன்னோர்களையும் தலையெடுக்க வொட்டாமல் அழுத்துவதும், தம்மிடத்தி லிருக்கும் தீயகுணங்களே அவர்களிடத்திலும் பிரதிபலிப்பதாகக் கருதி அவர்களையும் தாமிருக்கும் தாழ்ந்தநிலைமைக்கு கொண்டுவருவதுஞ் சகஜமாயிருக்கிறது.

சிற்சிலர் எங்ஙனமாவது சபைகளைக் கூட்டி ஏதோ தெரிந்தமட்டும் பிறருக்கு பயன்படச் சொல்வோமென்றாலும், அதிலும் ஒருவருக்கொருவர் உண்டாகும் பேதபுத்தியால் சபை சீர்குலைய ஏற்படு

கிறது. ஆனால் பெரிய ஆலோசனைச் சபையார்களிடத்தும், லௌகிக விவகாரங்களை விட்ட துறவிகளிடத்தும் எள்ளளவேனும் குற்றம் காணமுடியாமற் போகவில்லை. விவகாரமுள்ள இருகக்ஷிக்காரர்களுள் ஒரு நியாயாதிபதி ஒருவர்பக்கம் தீர்ப்புசெய்யும்போது ஒருவர் துவேஷமும், மற்றொருவர் சந்துஷ்டியும் அடைகிறார்களல்லவா? அதாவது, ஒருவன் ஒரு காரியம்செய்வதில் அக்காரியத்தால் அநுகூலப்பட்டவர்கள் அவனை நல்லவனென்றும் பிரதிகூலப்பட்டவர்கள் அயோக்யன் என்றும் சொல்வது இயல்பு. கடவுள் ஒருவர்தான் எல்லாவற்றிலும் சம்பூர்ணமானவர். துலாக்கோல்போல் உள்ளவர். அத்தகைய சாக்ஷாத் ஈஸ்வரனையும் எத்தனையோ அனந்தம்பேர் நிந்திக்கிறார்கள்.

ஆகையால் எந்தக் காரியமும் எந்தக் காலத்திலும் எல்லோருக்கும் திருப்தியாயிருக்கும்படி நடந்துகொள்வது சுலபசாத்யமன்று. ஆனால், அறிஞர்களில் பெரும்பாலோர் உசிதமெனக் கொண்டாடப்படுவதே சிரேஷ்டமாகக் கொள்ளல் நீதி.

நிற்க, வேறுசிலர் தாம் பெருமையடையவேண்டுமென்றும அதிகாரம் கிடைக்கவேண்டுமென்றும் உழைக்கிறார்கள். அதுவும் கூடாதென நிந்திக்க இயலாது. ஏனெனில், ஆரம்பகாலத்தில் நாம் செய்யப்புகும் எந்த நன்மையும் பிரதிபயனை உத்தேசித்துதான் செய்யமுடியும். பாவனைக்காக உழைப்பவர் சிலரும் நாளடைவில் உண்மையாகவே உழைப்பவர்களாவார்.

எவ்வாறெனில், ஒரு இராஜகுமாரத்தியை விவாகம் செய்துகொள்ள விரும்பிய அவளது அரண்மனை வேலைக்காரியின் குமாரன், அதன் தாய்மூலமாய் அவ்விராஜ குமாரத்தியால் கற்பிக்கப்பட்ட தந்திரத்தின்படி சந்நியாசிப் போலிவேடம் தரிக்க, மகுடமுடிதரித்த மன்னாதிமன்னர்களும் இவன் பாதத்தை வணங்க கண்ணுற்றபோது, ஆஹா! இப்போலி வேடத்திற்கு இத்தகைய மாட்சிமை யிருக்குமாகில் சுயமான துறவுக்கு எவ்வளவு மகிமை உண்டாகமாட்டாது என்று அக்கணமே உலகுநீத்து புறப்பட்டு சத்கதி யடைந்தான் என்னும் கதைபோல் கேவலம் பாவனைக்கும் விருத்திக்கும் உழைக்கிறவர்களும் நாளடைவில் உண்மையாய் உழைப்பார்களென ஊகிக்கவேண்டி வருகிறது.

ஆகையால் ஒவ்வொருவரும் எவ்விதத்திலாவது மனோவாக்கு காயம் இவைகளில் ஒன்றினாலாவது கிஞ்சித்து சிரத்தையுடன் அபிவிருத்திக்காக பிரயாசைப்படவேண்டியது அவசியமே. ஆனால், நம்மவர்களில் சிலர் "எங்களைக் காட்டிலும் உயர்வானஜாதி உலகினில் வேறில்லை" யென்று பிறரை எந்த இடத்தில் சந்தித்தபோதும் இதே பேச்சைப் பேசினால்மட்டும் குலம் விருத்திக்கு வருமா? இவ்விதம் பேசிவருவதால் பிறர் நம்மிடத்தில் வைத்திருக்கும் மதிப்பையும் இழந்து ஜீவனோபாயத்திற்கு கஷ்டப்படுவதும் நாணயத்திற்கு பங்கம் உண்டாகி கஷ்டநிலைமைக்கு பாத்திரர்களாகிறோம். ஜாதிப்பயித்தியம்

பிடித்த நம்மவர்களிடத்தில் பிறஜாதியார் அணுக அஞ்சுகிறார்கள்.

ஒருவனைப் பிரபுவாகச் செய்தது எது? அவனது நடையா, அல்லது உடுக்கும் உடையா, அல்லது பேசும் வார்த்தையா? அவனுக்கு ஏராளமான ஸ்திதி இருந்தால்மட்டும் பிரபுவென அழைக்கப்படுவான். அதுபோல் உயர்குலத்தோருக்குரிய குணமிருந்தால்மட்டும் நாம் உயர்குலத்தோரென அழைக்கப் படுவோம். ஆகையால், அக்குணத்தையடைய நாம்பிரதானமாய் அனுஷ்டானத்தில் செய்யவேண்டியதென்ன என்பதைக்கவனிப்போம்.

(1) நாம் நமது பிராஹ்மண தர்மத்திற்குரிய ஆன்ஹிக விதிப்படி காலையிலெழுந்து தேகசுத்தி முதலான நித்ய கர்மானுஷ்டானங்களை அனுஷ்டிப்பதோடு நமதுகுலச் சிறுவர்களுக்கும் அவ்வித நடைகளைப் பழக்கிவைக்கவேண்டும். எந்தப்பிரவிருத்தியைச் செய்தாலும் அவரவர்கள் தகுந்தபடி பிராதக்கால ஸ்நானம் செய்து மடிதரித்தபின்பு, "எங்கள் குலம் விருத்திக்கு வரவேண்டும். நாங்கள் உலகத்திற்கு பரோபகாரம் செய்ய வேண்டும்" என்று அவரவர் கோத்ர ரிஷிகளை வேண்டித் தியானம் செய்யவேண்டியது.

(2) நமது தொழில் விஷயமாக கூடியவரையில் பொய் திருட்டு நீக்கி வேலையை நாணயமாகச்செய்து கூலியையாவது அதிகமாக வாங்கவேண்டும். தாக்ஷண்யத்தை உத்தேசித்தாவது லாபத்தை உத்தேசித்தாவது பேராசையால் வேலைகளை அதிகமாக வாங்கிப்போட்டு வீண்சாக்குப்போக்குகள் சொல்லுவது கூடாது. கிராக்கி வேலைகளை கூடியவரை குறிப்பிட்டகாலத்திற்குள் கொடுக்கப் பிரயத்தனம் செய்யவேண்டும். இது நம்மிடத்தில் பெருங்குறை.

(3) நாம் எல்லோரும் ஒருவித ஆசாரமுள்ளவர்களாகி ஓர் பந்தியில் சாப்பிட மனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்போதுதான் ஒருவர் உயர்வென்றும் தாழ்வென்றும் பேச இடமிராது. நமக்குள் இருக்கும் பேதபுத்தியும் அகலும். பேதபுத்தி அகல குல ஒற்றுமை உண்டாகும்.

(4) நம்மவரில் ஆங்கிலம் படித்தவர்கள் தொழில் செய்பவர்களைப் பரிகாசம் செய்வதும், தொழில் செய்பவர்கள் படித்தவர்களை நிந்திப்பதும் கூடாது.

(5) ஐசுவரியம், கல்வி, வித்தை, அதிகாரம், நாகரீகம், அதிகமாய்ப் பெற்றிருந்தாலும் அவைகளில்லாத நம்மவரை இகழக்கூடாது. அவர்களுக்கு எவ்விதத்திலாவது போதித்து நம்மைப்போல் நல்ல ஸ்திதியில் கொண்டுவரவேண்டியது.

(6) வயதில் முதிர்ந்தோர் இளையவர்களைத் தூஷிப்பதும், இளையவர்கள்முதிர்ந்தோரைத் தூஷிப்பதும் கூடாது. வயதில் இளையவர்களாயிருந்தாலும் பூர்வஜென்ம கர்மபயனாய் மிக்க அறிவுள்ளவர்களாயிருப்பார்கள். ஆதலின் அவர்கள் பேச்சுக்கும்முதிர்ந்தோர் கட்டுப்படுதல்தவறன்று. நாம் நமக்கு ஹிதமென்று தோன்றுவதை பிறருக்குச் சொல்லவேண்டும். கேட்காவிடில் அவர்கள் மனப்போல் விட்டுவிட

வேண்டியதே யொழிய வீண்வருத்தம் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது.

(7) தங்கள் தங்கள் குழந்தைகள் கல்வியிலச் செய்யவேண்டும். குழந்தைகளுக்கு 12-வயது வரையிலாவது (அதாவது சுயபுத்தி ஏற்படுகிறவரையில்) கட்டாயம்-பாடசாலைக்கு அனுப்பி, பிறகு அவரவர்கள் புத்திக்கும் சக்திக்கும் தக்க தொழிலில் பிரவேசிக்கச் செய்வது பெற்றோர்களின் முக்கிய கடமை. குழந்தையிலார் தமக்கு பாத்யமுள்ள குழந்தைகள் அவ்வித பிரயோஜனத்தை அடையும்படி செய்யவேண்டும், அல்லது இனத்துக்குழந்தைகளுக்காவது உதவவேண்டும்.

(8) ஒவ்வோர் ஊரிலும் பல கிளைச் சபைகளை ஸ்தாபித்து அவற்றின்மூலமாய் ஒரு பெரிய சபைக்குப் பொருளுதவிசெய்து பலப்படுத்தவேண்டும். நம்மவர் ஒவ்வொருவரும் தம்மால் கூடியமட்டும் அவர்கள் சம்பாத்யத்தில் ரூபாய்க்கு இவ்வளவென்று பிரத்யேகமாக எடுத்து நமது குலச் சிறுவர்களுக்கு கல்விகற்பிக்க மூலதனம் ஏற்படுத்தவேண்டும். அவ்விதம் ஏற்படுத்துவதும் ஒருசபை மூலமாய்ச் செய்வதே உசிதம். இது விஷயத்தில் விஸ்வகுல ஆச்சார்யர்களின் பட்டறை குப்பை வரும்படியைமட்டும் செய்தாலே எத்தனையோபேர் விருத்திக்கு வரலாம்.

(9) ஒவ்வொரு நாட்டாண்மைக்காரர்கள் நம்மவர் கிருகங்களில் நடக்கும் விசேஷதினங்களில் குலோத்தாரணம் செய்யும்பொருட்டு ஓர் பலதானமோ தட்சணையோபெற்று மாணாக்கர்களின் கல்வி அபிவிருத்தியில் பயன்படச் செய்யவேண்டும். இப்படிச்செய்வதில் நாட்டாண்மைக்காரர்கள் சிரத்தையுடன் ஓர் கணக்கு புஸ்தகம் தயார்செய்துகொண்டால் பிறர் நிந்தை ஏற்படாது.

(10) தனக்குத் தான் நாட்டாண்மை வேண்டுமென்றும் சபைகளில் ஒரு உத்யோகம் கிடைக்க வேண்டுமென்றும் அந்தஸ்து அடையவேண்டுமென்றும் ஆவல்கொண்டு மன நொய்மையை விளைவித்துக்கொள்ளாம லிருக்கவேண்டும். நாம் பிறர் நன்மையைக் கருதிச் செய்வோமாயின் நமது பெயர் தானே விளங்கும். இகத்திலில்லாவிட்டாலும் பரத்தில் உண்டென்பது சர்வநிச்சயம். நாம் அதிகாரஸ்தர்களாயிருந்தால்மட்டும் பிறருக்கு நன்மைசெய்யலாம் என்பது தவறு. ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தகுந்த உதவியைச் செய்வதே கடமை.

(11) கடைசியாக, மேற் சொல்லிய விதிகளைக் கூடியவரையில் அனுஷ்டிப்பதோடும் காலையிலெழுந் திருக்கும்போதும், படுக்கைக்குப் போகும்போதும், சந்திவேளைகளிலும் "எங்கள் குலத்தார் நல்லொழுக்க முடையவர்களாகி விருத்தியடைந்து உலகிற்கு நன்மை செய்யவேண்டும்" என்று தியானிக்கப் பல்துளி பெருவெள்ளம் என்பதுபோல் நமது மனோசக்தி அதிகப்பட்டு நாம்சீக்கிரத்தில் விருத்தியடைவோ மென்பதிற் சந்தேகமில்லை என்பது என் மனத்துணிவு. சாஸ்திர சம்மதமும் இதுவே.

கு. ப. வே. ஆச்சார்ய, திருச்சி.

## மின்சாரசக்தி.

எலக்ட்ரிஸிடி யென்னும் மின்சாரசக்தியின் விநோதங்களைச் சிறிது சிறிதாக நாம் இப்போது அறிந்து வருகிறோம். ட்ராம் வண்டிகளோடுவது மின்சார சக்தியினாலேயே. மின்சாரத்தால் வெளிச்சமுண்டாவதால் விளக்குகள் வைக்கப்படுகின்றன. விசிறிக ளாட்டப்படுகின்றன. அக்னி யுண்டாக்கப்பட்டு சமையற் காரியங்கள் நடைபெறுகின்றன. பலதொழில்களுக்கு மின்சார முபயோகிக்கப்பட்டு வருகிறது. பாரசக்தியுடைய தாதவினால், இது பல்லாயிரம் பேர்களைக்கொண்டு பலநாள் செய்துமுடிக்கவேண்டியனவாகிய பிரம்மாண்ட வேலைகளை நொடிப்போதில் முடித்துத் தருகின்றது. நாளுக்குநாள் இதனுடைய உபயோகம் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றது. நவநவமான வேலைகளில் மின்சாரப் பிரயோகஞ் செய்வதற்காக, விஞ்ஞான சாஸ்திரிகள் இதைப் பரீக்ஷித்து வருகிறார்கள்.

இவர்களிலொருவர் மின்சாரசக்தியைக் கொண்டு தூக்கமுண்டுபண்ணும் விதத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். நாய்கள் முயல்கள் முதலிய ஜெந்துக்களுக்கு உபயோகப்படுத்திப் பார்த்தவிடத்து யாதொருதீங்கிற்கும் இடமுண்டாகாமலே மின்சாரத்தினால் பிராணிகளைத் தூங்கச்செய்யல மென்பது ஏற்பட்டுவிட்டது. இனி, தூக்கம் பிடிக்காது துயரப்படுவோர்களுக்கு மின்சாரம் நன்மருந்தாகும். தூக்கமின்மை யென்னும் நோயே தொலைந்துவிடுமென்று ஷை சாஸ்திர விற்பன்னர் சாற்றுகின்றார். மின்சாரத்தை ஒருநூதனவிதமாய் மண்டையில் மூளைக்குக் கீழே செலுத்துவதினால் தூக்கம் பிராப்தமாகிறதாம். எரியும் விளக்கை யவிப்பதற்கு சாவியிருப்பதுபோல் இதற்குஞ் சாவியுண்டு. எனவே, வேண்டும்போது நிறுத்தித் தூக்கந் தெளியச் செய்யலாம். இப்பிரயோகத்தினாற் கொஞ்சமேனும கஷ்டம் நேரிடாமற் பாதுகாப்புத்தேடி யமைப்பதற்காக இன்னுமின்னும் பலவித பரீக்ஷைகள் நடத்தப்பட்டு வருகின்றன. முற்றிலுங் கைகூடியபிற்பாடு இவ்வித்தை வெளிவரும்.

இங்ஙனம், மேல் நாட்டார்களாகிய ஐரோப்பியர்களும் அமெரிக்கர் முதலானவர்களும் புதுச்சக்திகளைக் கண்டுபிடிப்பதில் புத்தியைச் செலுத்தியிருக்கிறார்கள். மின்சார சக்தியையும் அதையுபயோகிக்கும் விதத்தையும்பற்றி பிரம்மாண்ட புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறதாக நம்மூரார் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நம்மவர்களோ வென்றால், இதைப் பற்றி சிற்பசாஸ்திரங்களிற் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாகப் பெருமை பேசுகிறார்கள். அந்த சிற்பசாஸ்திரங்க ளெங்கே? அவற்றிற் சொல்லப்பட்டிருக்கிற தென்பது உண்மைதானா? இஃதுண்மையாயிருந்து சிற்பசாஸ்திரங்களுங் கிடைப்பதானாலும், அவற்றை யெடுத்து விளக்கக் கூடியவர்க ளிருக்கிறார்களா? நாம் அவற்றினுபயோகத்தால் மின்சாரசக்திப் பலன்களைப் பிறருக்கு நிரூபணஞ் செய்து, பலவாறாக அதை யுபயோகப்படுத்தி மேல்

நாட்டார்போல் சீருஞ் சிறப்பு மடையக் கூடுமா?

எமக்கு நம்பிக்கையில்லை. ஆலயம், கிருகம், தடாகம், ரதம், விக்கிரகமாதியவைதவிர மற்றவற்றைப்பற்றி சிற்பசாஸ்திரங்களைத் தேடியடைந்து ஆராய்ந்து அறிந்து, பல தொழில்களிலும், மின்சார சக்தி முதலியவற்றின் பிரயோகங்களிலும் நாம் தேர்ச்சியடையலா மென்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. இஃது எட்டாப்பழத்திற்குக் கொட்டாவி விட்டகதையும், கனவை நினைந்து நினைவிலுருகிய கதையுமாகும். இதற்குச் சுலபவழி இங்கிலீஷ் படிப்பேயாகும். இதுவே கண்கண்ட வழியாயிருக்கிறது. இங்கிலீஷ் வாசிப்படைந்த நமது நாட்டார் பலர் அவ்வாசிப்பு பலத்தாலும், வெளிசஞ்சாரத்தாலும், ஆராய்ச்சி முதலியவைகளாலும் தொழில்நுட்பங்கள் பலவற்றையறிந்து உபயோகப்படுத்தி வருகிறார்கள். கைத்தொழில்களுக்குச் சுதந்திர பாத்தியதை கொண்டாடிக் கர்மகாரர்களென்று சொல்லிக் கொள்ளப்படும் நாம் அறியாதவுஞ் செய்யக்கூடாதவுமான மர்மங்களையும் அற்புதத் தொழில்களையும் பாரதமக்களாகிய மற்றையோர் அறிந்தும் செய்தும்வரக் கண்கூடாக் கண்டுவருகிறோம்.

இந்தஸ்திதியில், கொக்கைப் பிடிக்க விரும்பின ஒருவன் அதின் தலையில் வெண்ணெயை வைத்து அஃதுருகிக் கண்ணைமூடுந்தருவாயில் கைப்பற்ற எண்ணியவாறே போன்றுள்ளது நாம் சிற்ப சாஸ்திரங்கள் தேடிச் சிறப்படையலாமென்று கருதுவது. இதனாற் கண்டபலன் காலஹரணமேயன்றி மற்றொன்றுமில்லை. ஆதலால், நாம் நமது சிறுவர்களுக்கு இங்கிலீஷ் கற்றுக்கொடுத்து, அவர்களைத்தொழிற்றுறைகளில் திருப்பி, அவற்றைத்திருத்தி விருத்திசெய்யப் பண்ணவேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்விதத்தில் ஆங்கிலக்கல்வி நமது குலச்சிறுவர்களுக்கு அத்தியாவஸ்யமாயிருக்கிற தென்பதைக் குலாபிமானிகள் நன்கு குறித்துக் கொள்வார்களாக. ஆங்கிலக்கல்வி யடையப்பெறாத பாக்கியஹீனர்கள் சிலர் நமக்கு ஆங்கிலக்கல்வி அனாவஸியமென்று அறியாமையாற் கூறிவருவதாகத் தெரிகிறது. இது, மூக்கரையன் கதையை ஞாபகமூட்டுகிறதல்லால் மற்றில்லை. வேறொரு முறை அவ்வறிவீனத்தை யலக்கழிப்போம்.

---

## காயத்ரி மகாமந்திரம்.

வேதசம்பந்தமான நித்தியகர்மங்களாகத் துவிஜர்களுக்கு ஏற்பட்டிருப்பனவற்றுள் காலை மாலை சந்தியா வந்தனம் முக்கியமான கர்மமாம். சந்தியா வந்தனம் என்னப்படுவது ஈஸ்வர ஆராதனையேயல்லாமல் மற்றொன்றுமல்ல. பிற கர்மங்களைப் போலவே, சந்தியா வந்தனத்திலும்-அங்கி அங்கம்; முக்கியம் கௌணம்; உயிர்ப்பாகம் உடற்பாகம்-என்பனஉண்டு. அர்க்கியம், அபித் தியாநம், ஜபம், உபஸ்தாநம் என்பவை முக்கியமானவை யென்றும், ஆசமநம், சங்கல்பம், மார்ஜநம், தர்ப்பண மாதியவை கௌணமானவை யென்றுஞ் சொல்லப்படுகின்றன. கௌ

ணம் என்பது உபயோகமற்றது என்று பொருள்படுவதாகக் கொள்வது பிசகு. மற்றதை நோக்கி இது அமுக்யமென்று கொள்வதே சரியாகும்.

காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் என்னும் அரிஷட்வர்க்கங்களாகிய மந்தேஹர்கள் என்னும் அசுரர்கள், ஆன்மாவாகிய ஞானசூரியனையோட்டியப்புறப்படுத்துவதற்காக காயத்ரீமந்திரத்தைத் தியானித்து உச்சரித்து அம்பு எய்வதின் அறிகுறியாக ஜலத்தைக்கையிலேந்தி எறிவது அர்க்கிய பிரதானமாகும். இது மார்ஜநம், ஆசமநம், பிராணாயாமம் முதலிய கிரியைகளினால் பிராணன், வாக்கு, காயங்களைப் பரிசுத்தப்படுத்தி, பிறகு காயத்ரீ மந்திரத்தால் மனத்தூய்மை யெய்தச் செய்து கொள்வதாம்.

மனத்தூய்மையெய்தி, மன அலைகள் ஓய்ந்தபின் (சித்தவிர்த்திகள் ஒடுங்கிய பிற்பாடு), ஆதித்தன் முதலான வெளிப்பிரபஞ்சத்தில் அந்தர் யாமியாயுள்ள பரமாத்மாவும், சந்தியா உபாசகருடைய அன்னமய, பிராணமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களுக்குள் ளிருக்கும் ஆன்மாவும் ஒன்றே, இரண்டல்ல வென்னும் உள்ளுணர்வடைதல் அபித்தியானமாம்.

ஜெபமாவது—மேலே தெரிவித்தபடி ஒன்றான உள்ளுணர்ச்சியுண்டாக, அவ்வுணர்வின் பொருளாகிய ஈசுவரனைத் தியானிப்பது. இதுவே காயத்ரீஜெபம். இம்மகாமந்திரத்தின் கருத்து-சர்வஜீவர்களுக்கும் தேஜஸ் அளிப்பவரும், பிரபஞ்சமெல்லாஞ் சிருஷ்டிக்கின்றவரும், எவராலும் பூசனைசெய்யப்படுபவரும், எமது புத்தியைப்பிரேரணை செய்கிறவரும், நன்னெறியில் நடத்துகின்றவரும் ஞானப்பிரகாசருமாகிய அந்த ஈசுவரனைத் தியானஞ் செய்கிறோம்—என்பதே. பிரபஞ்சத்திலுள்ள சர்வவித்தைகளும் வேதங்களில் அடக்கமாயிருக்கின்றன. வேதங்களோ காயத்ரி மந்திரத்துளடக்கம். காயத்ரியோ பிரணவத்துளடக்கம். இதுவே உபநிஷத்துக்களின் துணிபாகும்.

காயத்ரீமந்திர உண்மையுணர்ந்த குருவானவர் உபநயன சம்ஸ்காரகாலத்தில் சிஷ்யனுக்கு உபதேசிப்பார். இதற்குபிரம்ஹவித்யை யென்றுபெயர். பூர்வகாலத்தில் இஃதுபதேசிக்கப்பட்ட ரக்சியமுறையைக்காட்டும் வண்ணம், தற்காலத்திலும், உபதேசிக்குஞ்சமயத்தில் பட்டையேனும் அல்லது வேறு சுத்த வஸ்திரத்தையேனும் ஆசாரியனும் சிஷ்யனும் போர்த்துக் கொண்டு, ஆசாரியன் சிஷ்யனுடைய காதில் உபதேசிப்பதுண்டு. இப்பட்டுப் போர்வையானது, பிரம்ஹவித்யையை உபதேசிக்கப் பெறுபவன் துவிஜனாகின்ற வாற்றால், அந்த கர்ப்பப்பையைச் சூசிப்பிக்கிறதென்றுங் கொள்ளலாம்.

காயத்ரி மந்திரமானது மந்திரங்களுக்குள் மிகச் சிரேஷ்டமானது. இதைக்கிரமப்படி உச்சரித்திடுவோர் தாம் நலம்பெறுவதோடு உலகமுழுவதும் நலம்பெறச் செய்கின்றவராவர்.

‘‘எங்களுடைய புத்தியைப்பிரேரணை செய்து நடத்துகின்ற பிரகாசமான அந்த

ஞான சூரியனுடைய திவ்வியஜோதியைத் தியானிக்கின்றோம்''—என்பதே காயத்ரீ மந்திரத்தின் சுருக்கமான அர்த்தம். இதைத்தியானிப்பவன் சர்வஜீவராசிகளுடைய நன்மையும் பிரார்த்திக்கின்றானென்பது பன்மைகளினால் வெளிப்படும்.

இம்மந்திரத்தை உச்சரிப்பதற்குமுன் மூன்று அல்லது ஏழு வியாகிருதிகளை உச்சரிக்கவேண்டும். இவை மந்திர உண்மைகளைக் காட்டுந்திறவுகோல்களாகும். பூ: புவ: ஸுவ—என்பனவே மூன்று வியாகிருதிகளாகும். இவை மனிதனுடைய ஸ்தூல, சூக்கும, காரணமாகிய வியஷ்டி சரீரங்களையும்; வைஸ்வாநரன், ஹிரண்யகர்ப்பன், ஈஸ்வரன் என்ற சமஷ்டிசரீரங்களையும்; ஜாக்ரத, ஸ்வப்ன, ஸுஷுப்தியாகிய மூன்றவஸ்தைகளையும் பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்னும் மூன்று லோகங்களையுங்குறிக்கின்றன. பூ: புவ: ஸுவ: மஹ: ஜந: தப: ஸத்யம்—என்பவையே ஸப்தவியாகிருதிகளாகும். இவை மனிதனுடைய ஸப்த அம்சங்களையும், பிரகிருதியின் ஸப்தநிலைமைகளையும், ஸப்தலோகங்களையுங் குறிக்கின்றன.

ஜபஞ்செய்யுங்காலத்தில் உபாசகனானவன் விராட்புருஷனிடம்ஒருமைப்பட்டு மூன்று அல்லது ஏழு லோகங்களுடன் தன் மூன்று சரீரங்களை அல்லது ஏழு அம்சங்களை முறையே சாந்தமாகவும் நேர்மையாகவும் பொருந்தும்படி செய்துகொண்டு, தன் இருதயத்துள்ள ஆன்மாவாகிய ஞானசூரியனிடத்திலிருந்து சர்வலோகங்களிலுமிருக்கும் ஜீவராசிகளுக்கு ஸந்துஸ்டி, ஞானம், சாந்தமிவையுண்டாகவேண்டுமென்று ஒரே மனோநிலையில் நின்று சிதறாது தியானஞ்செய்யவேண்டும். இங்ஙனம் பக்தியுடன் உண்மையுணர்ந்து சூரியனை யுபாஸிக்கின்றவனே பிராமணனாவான்.

பிருஹதாரண்ணியக, சாந்தோக்ய, ஸுயோபநிஷத்துகளில் காயத்ரீ உபாசனமுறை நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. காயத்ரீசப்தம் ஸ்திரீலிங்கமாவதால் ஈஸ்வரப்பிரதிபாதகமான மந்திரமாயிருந்தாலும், தேவியாக உபாஸிக்கப்படுகிறது. இம்மந்திரத்தியானம்—காலையில் சிவப்பு வஸ்திர மணிந்த காயத்ரீ தேவதையாக, மூலாதாரத்தின் கண் லக்ஷியம்வைத்தும்; மத்தியானத்தில் வெள்ளை வஸ்திரமணிந்த சாவித்ரி தேவதையாக புருவமத்தியிலும்; சாயங்காலத்தில் நீலவஸ்திரமணிந்த சரஸ்வதிதேவியாக இருதயத்திலும்—நிகழவேண்டும். (மாத்தியாந்நிகம் வேதத்தில் விதிக்கப்பட்டதல்ல, ஸ்மிருதிப்புரோக்தமாம்.)

சாதாரணமாயுபதேசிக்கப்படும் காயத்ரிக்கு மூன்று பாதங்களுள. இதை த்ரிபாதகாயத்ரி என்பதுண்டு: இது சகுணம் மூன்றும் முறையே பூலோக, புவர்லோக ஸுவர்லோகமென்று உபலக்ஷமாகக் கூறப்பட்டதிரிபுடி சம்பந்தமுடையன. இந்த காயத்ரியுபாசனைசெய்வோன் கர்மயோகி: என்றால், சகலகர்மங்களையும் தனக்கெனச் செய்யாமல் பிறருடைய நலத்தைக்கோரி ஈஸ்வரார்ப்பணமாகச் செய்கி

ன்றவன். பிரம்மச்சாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன் என்னும் முதல் மூன்று ஆஸ்ரமிகளும் இந்த காயத்ரி உபாசனைக்கு அதிகாரிகளாவர். நான்காவது ஆஸ்ரமத்தனாகிய சந்நியாசி திரிபுடியையும் திரிலோகங்களைந் தாண்டினவனாதலால் த்ரிபாத காயத்ரியுபாஸனை அவனுக்கு முக்கியமல்ல. அவன் சதுஷ்டிபாதகாயத்ரிக்கு அதிகாரியாவான்.

காயத்ரியை ஸ்திரீரூபமாக உபாசிப்பதில் ஈஸ்வரனுடைய அபின்னபராசக்தியாயுபாசிக்க வேண்டும். கேனோபநிஷத்தில் உமாதேவியே காயத்ரியெனப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

திருமந்திரம்—

காயத்திரியே கருது சாவித்திரி
யாய்தற் குவப்பர் மந்திரமாங்குன்னி
நேயத்தேரேறி நினைவுற்று நேயத்தாப்
மாயத்துட்டோயா மறையோர்கடாமே

என்று கூறுகிறது. ஸ்வேதாஸ்வதரோபநிஷத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேவாத்மசக்தியும், கீதையில் ஏழாவது அத்தியாயம் ஐந்தாவது ஸ்லோகத்திற் கூறப்பட்டுள்ள பரப்பிரகிருதியும் காத்ரியேயாம்.

## அதிமதுரம்.

கல்போது என்னும் ஊரில் பெரிய தம்பி ஆச்சாரியார் என்னும் ஒருவித்வசிரோமணியிருந்தார். இவரை அவ்வூர் இரட்டியாரொருவர் "என்ன ஆச்சாரியாரே! தட்டான் பயிர் காய்த்திருக்கின்றதா?" என்றுகேட்க, அதற்கு விஸ்வகுல ஆச்சாரியாராகிய ஷை பண்டிதோத்தமர் "ஆமாம், உழவிரட்டி யானதினால் காய்க்கத் தடையேது? என்றனராம்.

லோபகுணத்திற் சிறந்த செட்டியாரொருவரிடம் ஒருபுலவர் சென்று நான்குபாடல்களைச் சொல்லி "என்கவிதீரக் காசுகொடுக்க வேண்டும்" என்று கெஞ்சினர். செட்டியார் புலவரைப்பார்த்து "சும்மா சொந்திரவுப்படுத்தாதேயுங்கள்; காசா லேசா" என்னப் புலவர் மிகவும் மனம் நொந்தவராய் மிகுந்த கோபத்துடன் "அப்படியா? காசா லேசா" என்று செட்டியாரைநோக்கிச் சபித்துவிட்டுப் போயினராம்.

***

விஸ்வகர்ம குலோற்பவராகிய மாம்பழக்கவிச் சிங்கநாவலரென்னும் அந்தகப்புலவரிடம் இராமாநுஜகவிராயர் ஒருநாள் சென்றார். நாவலர், வந்தவரின்னாரென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு, "யார் அது?" என்று கேட்கக், கவிராயர் "நான்தான், இராமாநுஜன்" என்று பதில் கூறினர். இதைக்கேட்டதும் நாவலர் "ராமாநுஜன் வரவுக் கிடமிருக்கலாம்; 'இ' வன் வந்தது?" என்றனர். உடனே இராமாநுஜகவிராயர் "மாம்பழத்தின் சுவையறிய வந்தது" என்று விடையளித்தனர்.

***

ஷை மாம்பழக் கவிச்சிங்கநாவலர் ஒரு சமயம் இராமநாதபுரத் தரசர் சமுகத்திற்கு ஓர் பையனைத் துணைக்கொண்டு சென்று, அரண்மனைவாயிலைக் கிட்டியதும் அப்பையனை விடுத்துத்தனியே கையிற் கொண்டிருந்த கோலையூன்றிக்கொண்டு, அங்கிருந்த மரப்படி மீதேறிப் போகையில் அரசர்கண்டு "தட்டாமல்வருக" என்றனராம். (நாவலர் பொன்வினை செய்யும் சுபர்னஸ கோத்திரஸ்தர். இதைக்குறிப்பிக்க வேண்டியே அரசர் அவ்வாறு கூறினர்.) அரசர் சொன்னது தமது செவியில் விழுந்த மாத்திரத்தில் நாவலர் ஷை அரசர் மரபைச்சுட்டும் வண்ணம், "மரப்படிதானே" என்று சொல்லிக்கொண்டே சமுகத்தை யடைந்தனராம்.